# கட்டபொம்மன்

## காட்சி: 1

இடம்: சக்கம்மாதேவி கோவில்.

கதாபாத்திரங்கள்: மன்னன் கட்டபொம்மன், வீர சக்கம்மாள், அமைச்சர் தானாபதிப்பிள்ளை, இளவரசர் ஊமைத்துரை, தளபதி வெள்ளையத்தேவர்.

(கட்டபொம்மன் ஆண்டுகொண்டிருக்கும் பாஞ்ச பதியிலுள்ள பக்தர்கள், தேவியைப் பணிவுடன் வணங்கி நிற்கிறார்கள். அன்று ஆயுத பூசை, விழா பெருவிழா, பூசை மணிகள், சேகண்டிகள், சங்கம் யாவும் ஓங்காரமிட்டு ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சாம்பிராணிப் புகை, பூமணம், தேவியின் பட்டுப் பூ அலங்காரம்-எல்லாம் மிகமிக தடபுடல்! ஒருபக்கம் பெண்கள், இன்னொரு பக்கம் ஆண்கள் இன்னும் மன்னன் கட்டபொம்மன் வரவில்லை. அவர் வரும்போது, 'வெற்றிவேல்! வீரவேல்!' என்று விண்ணதிர முழக்கம் செய்வார்கள். இதோ கட்டபொம்மன் வரப்போகிறான். வந்தேவிட்டான்! யானை நடை நடந்து கம்பீரமாக அரச தோரணையில் தேவி சக்கம்மாளை வணங்கிய வாறே வருகிறான். பக்தியுடன் வணங்குகிறான். 'வெற்றிவேல்! வீரவேல்!' என்ற முழக்கம்! கட்டபொம்மன் வணங்கியவாறே அனைவரையும் ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு)

கிட்டபொம்மன் : ஆ! வெற்றிவேல்! வீரவேல்! என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள் நீங்கள்?

காலாவதியாபிள்ளை: காஞ்சபதி மன்னனுக்குஇன்னும் புரியவில்லையா?வெற்றிவேல் வீரவேல். நமதுவெற்றியை யும் நமது வீரத்தையும்...

கிட்ட: போதும் நிறுத்துங்கள்! வெற்றி என்பது ஒரு பாபகரமான வார்த்தைஅல்லவா!ஒருவன்வெற்றிபெற்றான் என்றால், யாரோ எங்கோ ஒருவன் தோல்வியால் சாய்ந்து விட்டான் என்றுதானே அர்த்தம்! ஆகவே, இன்று முதல் சாந்திவேல், சக்திவேல் என்றே எல்லோரும் கூற வேண்டும்.

அனைவரும்: சாந்திவேல்! சக்திவேல்!

கிட்ட : அதே சரே, அடலே சேசானு.

காலா: அரசே! என்ன உங்களுக்கு வாய்ப்புலப்பம்! அரண்மனை வைத்தியரை அழைக்கட்டுமா?

கிட்ட : புலம்பவில்லை அமைச்சரே! ‘அதுதான் சரி. அப்படியே செய்யுங்கள்’ என்று தெலுங்கில் சொன்னேன்.

சீமைத்துரை : (இரகசியமாக) அண்ணா, இந்த நாட்டில் தெலுங்கு பேசவேண்டாம் என்று நான் சொன்னதை நீங்கள் அடிக்கடி மறந்துவிடுகிறீர்களே!

கிட்ட: நல்லவேளை நினைவுபடுத்தினாய்!(தேவியை வணங்கியவாறே) தேவி சிக்கம்மா! இதோ உன் பக்தன் கரம் கூப்பித் தொழுகிறேன். இந்த நாட்டு மக்களையும், குறிப்பாக என்னையும் நீதான் காப்பாற்ற வேண்டும். எல்லோரும் பசியில்லாதிருக்க வரம் தா! அதற்காக அவசரத்தில் அஜீரணத்திற்கு வரம் தந்துவிடாதே! நாடு

என்னும் தொட்டிலில் எங்களையெல்லாம் போட்டுக் குலுக்கிப் பாட்டுப்பாடி, தாலாட்டிக் கொண்டிருக்கும் தாயே, இரண்டாவதாக இன்னொரு வரம் தா! தா! தா! தந்துகொண்டேஇரு அம்மையே! அம்மைக்கும் அம்மையே! அம்மைக்கும் அம்மையே! அப்படியென்றால் பாட்டியா என்று கேட்டுவிடாதே! சகல லோக மாதா் என்ற பொரு ளில்தான் நான் அப்படிச் சொன்னேன். ராட்சசி! இல்லை! இல்லை! ரட்சகி! உனக்கு வேண்டியதையும் எங்களிடம் சங்கோஜமில்லாமல் கேள் தாயே!நாங்கள் அன்னியர்களா? நீ பெற்றெடுத்துச் சுற்றி விளையாட விட்டிருக்கும் சொந்தப் புதல்வர்களன்றோ! மற்ற ஊர்களில் கேட்பதைப் போல உயிர்ப்பலி மாத்திரம் கேட்டுவிடாதே! எனக்கு உயிர்ப்பலி என்றால் ஒரே காப்ராவாக இருக்கிறது! வயிறு கலங்குகிறது!தாயே, நீக்கிடு பஞ்சம் நீயே தஞ்சம் கண்பார் கொஞ்சம்! சாந்திவேல்!

அனைவரும் : சக்திவேல்!

(யாவும் முழங்குகின்றன. பூசாரி தீப ஆராதனை காட்டுகிறான். கிட்டபொம்மனின் முன்பு கற்பூரத் தட்டைக்கொண்டு வருகிறான். கிட்டபொம்மன் நமஸ்காரம் பண்ணப் போகிறான் ஆனால் கும்பிடுவதற்காகச் சேர்த்த கைகள் ஒட்டிக்கொண்டுவிடுகின்றன! பிரிக்க முடிய வில்லை!)

கிட்ட : (அதிர்ச்சியுடன்) ஐயோ! இதென்ன சோதனை! தாயே! உன்னைச் சேவிக்கும் பொருட்டுச் சேர்ந்த கரங்கள் ஒட்டிக் கொண்டனவே! அட அமைச்சர் காலாவதி! அரசர்கள் இப்படித்தான் கம்பீரமாகக் கும்பிட வேண்டும் என்று சொன்னீரே, உம் சொல்லைக் கேட்டுக் கையை வளைத்துக் கும்பிட்டுச் சுளுக்கிக் கொண்டதே! வழக்கம் போல் கும்பிட்டிருந்தால் வம்பு வந்திருக்காதே! சிக்கம்மா! விஷயம் சிக்கலாகிவிட்டதடி!

சீமை : (துடிப்புடன் அருகில் சென்று) அண்ணா, நான் இருக்கப் பயமேன்? இதோ கைகளை இழுத்துப் பிரித்துவிடுகிறேன்!

கிட்ட : (பயத்துடன்) வேண்டாம் தம்பி, வேண்டாம்! நீ முரடன்! கையைப் பிய்த்து எடுத்து விடுவாய்! தளபதி சள்ளையத் தேவரே... ஐயையோ! நீரும் வேண்டாம்! அமைச்சர் காலாவதி, நீர்தான் சாமர்த்தியமாக எடுக்க வேண்டும். கையைப் பிரிக்க முடியவில்லை... வலிக்கிறது! ஐயோ...உம்...உம்...உம் கை வலிக்கிறதே...உம்...உம்...

காலா : (அருகில் வந்து) இதோ ஒரு நொடியில் உங்கள் கைகளைப் பிரித்துவிடுகிறேன்.

சீமை : (காலாவதியை நோக்கி) பிரிவினை தவிர உமக்கு வேறு என்ன தெரியும்? என் அண்ணா கரங்களை நீர் தொடச் சம்மதிக்க மாட்டேன். தேவரே அரண்மனை வைத்தியரை உடனே அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்.

சள்ளையத்தேவர் : அவர், அன்ன ஆகாரம் இல்லாமல் சாகக் கிடக்கிறார்!

கிட்ட : ஏன்? நமது சத்திரத்திலாவது சாப்பாடு போடக் கூடாதா? அல்லது தம்பி, நீயாவது பலகாரம் கிலகாரம் வாங்கிக் கொடுக்கக் கூடாதா அவருக்கு?

சள்ளை : அதல்ல அரசே! அவருக்கு வயிற்றுவலி! அதனால் தான் அன்ன ஆகாரம் உட்கொள்ளாமல் கிடக்கிறார்!

சீமை : (கோபத்துடன்) இவனும் ஒரு வைத்தியனா? வருடம் முந்நூற்றி அறுபத்தி அஞ்சு நாளும் நோயாளி யாகக் கிடக்கிறானே!

சள்ளை : இளவரசே, வைத்தியர், தானே தனக்கு நோய்களை உண்டாக்கி, தனது மருந்துகளைத் தாமே பரீட்சை செய்து பார்க்கிறாராம்!

சீமை : தற்கொலை முயற்சி! தற்கொலை செய்து கொள்ளுவதற்கு முன் அந்த வைத்தியனைப் பிடித்து இழுத்து வாருங்கள்!

(கையைப் பிரிக்க முடியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் கிட்டபொம்மன், தளபதியை நோக்கி)

கிட்ட : ஐயோ பாவம் அவரை என் போட்டுக் கஷ்டப் படுத்துகிறீர்கள்? தளபதி, இதோ நான் சொல்லும் அனுபவ மருந்தை அவருக்குப் போட்டுக் குணப்படுத்து. காரம் கலந்து வயிறு நிறையச் சாப்பிடச் சொல்லும். ஐயோ! கை வலிக்கிறதே! உம்...உம்...உம்...

(கிட்டபொம்மனின் பட்டத்து ராணி கீர சக்கம்மாள் அருகில் வந்து)

கீரசக்கம்மாள் : ஓய் பூசாரி, அதோ அந்தக் கற்பூரத் தட்டை இங்கே கொண்டு வாரும். என் கற்பின் மகிமை யால் என் கணவரின் கைகளைப் பிரித்து விடுகிறேன்.

(பூசாரி கற்பூரத்தட்டைக் கொடுக்க, அவள் வாங்கி)

கீரசக் : என் கண் கண்ட சாமி! ராமனைவிட ராம பக்தி பெரிசாம்! அதுபோல, உங்களைவிட உங்களிடம் நான் காட்டும் பக்திதான் பெரிசு! இதோ அந்தப் பக்திக்கு ஒரு கும்பிடு போட்டு உங்கள் கைகளைப் பிரிக்கிறேன்.

(எரிந்து கொண்டிருக்கும் கற்பூரத் தட்டைக் கிட்டபொம்மனின் கைகளுக்கு அடியில் பிடிக்கி றாள். கிட்டபொம்மனின் கைகள் பிரிகின்றன)

கிட்ட : (துள்ளிக்குதித்து) ஆ! சூடு! சூடு! கை பொத்து விட்டதே! கை வெந்துவிட்டதே!

கீரசக் : பரவாயில்லை, இதுவரை போரில் விழுப்புண் பட்ட மன்னர்கள்தாம் நாடாண்டிருக்கிறார்கள். நீங்கள் பூசை மடத்தில் விழுப்புண் பெற்ற புதுமையான மன்னர்!

கிட்ட : (மகிழ்ச்சியுடன்) பட்டமகிஷியே! கிட்ட வா! உன் கெட்டிக்காரத்தனத்தை என்னென்பேன்! உன் மூளை வலியினால் என் கை வலியைப் போக்கிவிட்டாய்! (அனைவரையும் நோக்கி) கீரசக்கம்மா...

அனைவரும் : வால்க!

கிட்ட : கீரசக்கம்மா!

அவனவரும் : வால்க!

சள்ளை : அரசே! இன்று நம் நாட்டில் வீரர்கள் தினம் அல்லவா! வீரர்கள் எல்லோரும் கோட்டை ஓரத்தில் கூட்டம் போட்டிருக்கிறார்கள். அந்த விழாவுக்கு நீங்கள் விரைவில் தாமதம் செய்யாது எழுந்தருளவேண்டும்.

கிட்ட : முடியாது! எப்படி எழுந்தருள்வது?

சள்ளை : ஏன்?

கிட்ட : ஒரு மனிதன் எழுந்து நின்றுகொண்டிருக்கும் போதே எழுந்தருள்வது எப்படி? வேண்டுமானால் நடந்தருள்கிறேன்!

சள்ளை : சித்தம், நடந்தருளுங்கள் சுவாமி!

கிட்ட : அதே சரே, அட்லே சேசானு! இல்லை இல்லை, அதுதான் சரி, அப்படியே செய், கீரி, உன் சொந்தப்புரமான அந்தபுரம் சென்று சோறு கீறு எதையாவது தின்றுகொண்டிரு. நான் வீரர்களிடம் சென்று கொஞ்சம் அறைகூவிவிட்டு வருகிறேன்.

கீரசக் : சரி நாதா! (தோழிகளுடன் போகிறாள்)

காலா: புறப்படுங்கள் அரசே! நேரம் போய்க் கொண்டே இருக்கிறது. கோட்டைப்பக்கம் வீரர்கள் தனி யாக நிற்கப் பயந்து கொண்டிருந்தார்கள். பாதுகாப்புக் காக அவர்களது மனைவிமார்களையும் அங்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறேன்! அவர்களது பிஞ்சுக் குழந்தை கள், வீட்டில் தாயைத் தேடிப் பாலுக்காக அழுகின்றன. நீங்கள் சீக்கிரம் புறப்பட்டால்தான் வீரர்களை மனைவி மார்களுடன் பந்தோபஸ்தாக வீட்டுக்கு அனுப்பி, குழந்தை களின் உறுபசியைக் களைய முடியும்.

கிட்ட: ஆகா! காஞ்சபதியின் குழந்தைகள் கதறு கின்றனவா! சகியேன்-சகியேன்! இதோ புறப்பட்டுவிட்டேன் அமைச்சரே! புறப்படும்போது முறைப்படி சிக்கம்மாவைக் கும்பிட வேண்டுமல்லவா? இதோ கும்பிடுகிறேன்.

(கும்பிடப் போகும்போது)

காலா: அரசே! கைகள் மறுபடியும் ஒட்டிக்கொண்டு விட்டால்?

கிட்ட: மந்திரிக்கழகுவரும் பொருளுரைத்தல். நல்ல வேளை நினைப்பூட்டிவிட்டீர். இதோ மனத்தால் கும்பிட்டு வாயால் வழியனுப்பி வருகிறேன். தேவி சிக்கம்மா, வீரர்கள் என்றதும் நினைவுக்கு வருகிறது யாரோ கிள்ளையர்களாம் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறார் கள். பெரிய காப்ரா பண்ணுகிறார்கள். எங்கள் பிரசி னையை நீ தனித்திருந்து அலசி ஆராய்ந்து ஒரு முடிவு செய் அம்மா. இது உன் காஞ்சபதி. இதன் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நீயே ஜவாப்தாரி. நாங்கள் விழாமல் இருக்கத் தான் உனக்கு விழா நடத்துகிறோம். எனக்கு என்னவோ காலம் போகிற போக்கைப் பார்த்தால் பயமாகத்தான் இருக்கிறது! இதோ வீரர்களிடம் போய் அறைகூவ வேண்டியதிருக்கிறது, அது வேறு காப்றா! என்ன கூவு வேனோ எப்படிக் கூவுவேனோ? எனக்கே புரியவில்லை! பிரம்மன் நாவில் சரஸ்வதி குடியிருப்பதுபோல நீ என் நாக்கில் கொஞ்சநேரம் குடியிருந்து கூவிவிட்டுப் போம்மா! நமஸ்தே! நமஸ்தே! ஆயிரம் நமஸ்தே! அவ்வளவுக்கு இருக்குது அவஸ்தே!

அனைவரும்: சக்திவேல்!

(மன்னன் முன்னே செல்ல, அனைவரும் பணிவுடன் தொடர்ந்து செல்லுகிறார்கள்)

(திரை)

## காட்சி 2

இடம்: கோட்டைப் பக்கம்.

கதாபாத்திரங்கள்: கிட்டபொம்மன் காலாவதி, சீமைத் துரை, சள்ளையத்தேவர், வீரர்கள்.

(அனைவரும் காஞ்சபதியின் தேசிய கீதத்தை கம்பீரமாகப் பாடுகிறார்கள். மன்னன் அனைவரையும் பெருமிதத்தோடு பார்க்கிறான். வெள்ளைக் கொடியில் சதுரமாகத் துளை போடப்பட்ட காஞ்சபதியின் தேசியக் கொடி ஒய்யாரமாகப் பறந்து கொண்டிருக்கிறது)

அனைவரும்:

வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!
வாள்களெல்லாம் உறைதனிலே
வச்சதுபோல் வாழ்கவே!
வயித்தைக் கழுவும் பயித்தை வளர்க்கும்
வயலு சக்தி வாழ்கவே!
ஆள்களெல்லாம் தூங்கும்போது
அடிக்கும்மூச்சு வாழ்கவே!
ஆலயத்தில் சாமியெல்லாம்
அசைஞ்சிடாமல் வாழ்கவே! (வாழ்கவே)

எதிரிவந்தால் அடுத்தநிமிஷம்
குதிருக்குள்ளே வாழ்கவே!
ஈட்டிவந்தால் தலையைநீட்டி
எகிறிக்குதிச்சு வாழ்கவே!
மதிலுக்குமேல் பூனையாகி
மாண்புயர்ந்து வாழ்கவே!
மாட்டிக்காமல் பயத்தை வெளியே
காட்டிக்காமல் வாழ்கவே! (வாழ்கவே)

காளையர்கள் முதுகினிலே
கவசம்போட்டு வாழ்கவே!
காதலர்கள் சந்திச்சதும்
கயிற்றை மாட்டி வாழ்கவே!
தோலிலெல்லாம் திணவெடுக்கும்
வீரரெல்லாம் வாழ்கவே!
தொத்துநோய் வைத்தியர்பால்
தோலைக்காட்டி வாழ்கவே!

சொந்தநாட்டில் திக்விஜயம்
வந்தவன் எம்மன்னனாம்!
சுத்தவீரன் கிட்டபொம்மன்
சுத்தமாக வாழ்கவே!
எந்தவீரன் வந்தபோதும்
மன்னனிவனைக் கண்டிட்டால்
எதுக்குச்சண்டை நமக்கு என்று
எடுத்தெறிவான் வாளையே! (வாழ்கவே)

கிட்டபொம்மன் ராணியோடு
எட்டடுக்கு மாடிமேல்
சுட்ட இட்லி சட்னிபோல
சொந்தம்கொண்டு வாழ்கவே!
கட்டழகாம் காஞ்சபதியின்
குட்டிச்சுவரும் வாழ்கவே
கண்டவன்கேட்டவன் நின்றவன்போனவன்
காலமாகாமல் வாழ்கவே!
வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!

கிட்டபொம்மன்: (பெருமிதம் கொண்டு) ஆகா! ஆகா! என் கா்ஞ்சபதியின் தேசியக்கீதத்தைக் காதால் கேட்கும் போது கண்ணுக்கு எவ்வளவு இன்பமாக இருக்கிறது தெரியுமா? என் தாயகமே! இப்பொழுதான் என் ஆத்மா சாந்தி அடைகிறது!

காலாவதியாபிள்ளை: அரசே! வீரர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை உங்களிடம் கேட்கக் காத்திருக்கிறார் கள்.

கிட்ட: சொல்லுங்கள் வீரர்களே!

வீரர்கள்: எங்களுக்குப் போர் வேண்டும்! அரசே! அதிகமானின் பாசறையில் கிடந்த ஆயுதங்கள்போல, இங்கும் ஆயுதங்கள் துருப்பிடித்து மழுங்கிப்போயின. குறைந்தபட்சம் ஆயுதங்களின் நலனுக்காவது போர் தொடுத்தாகவேண்டும் நாம்!

கிட்ட: (முழக்கம் கேட்டு மனம் மாறி) அதுதான் சரி, அப்படியே செய்வோம். காஞ்சபதியின் கிழட்டு, முரட்டு, வாலிப நடுத்தர வீரர்களே! அதோ ஒதுங்கி பதுங்கி நின்று ஒய்யாரமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் வீரிகளே! உங்களை நோக்கி ஆளுக்கொரு கும்பிடுபோட எனக்கு ஆசைதான். அவகாசம் இல்லை. ஆகையால் ஒரே கும்பிடுடன் நிறுத்திக் கொள்கிறேன். அதையே ஆயிரம் கும்பிடுகளாக்கி ஆனந்தப்படுங்கள்.

மந்தைபோல் அழகாக நின்றுகொண்டிருக்கும் என்தன் வீரர்களே! உங்களுக்குப் பெரியஅறைகூவல் விடுக்கஆசை படுகிறேன். தம்பி சீமைத்துரையும் நமது அமைச்சர் காலாவதியும் ஆளுக்கு ஒரு நாழிகை அறைகூவுவார்கள். அடுத்துச் சள்ளையத்தேவன் அறை கூவுவான். அதற்கு அடுத்து உங்களது ராஜாதி ராஜனாகிய நான், கிட்ட பொம்மன் கூவுகிறேன், கொஞ்சம் அமைதியாக இருந்து கூவலைக் கேளுங்கள்.

(வீரர்கள் கை தட்டுகிறார்கள். மன்னன் தன் ஆசனத்தில் உட்காரவே, சீமைத்துரை எழுந்து பெசுகிறான்.)

சீமைத்துரை: எல்லோருக்கும் வணக்கம். காஞ்சபதி வீரர்கள் நோஞ்சான்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் உள்ளம் அப்படிப்பட்டதல்ல. ரொம்பப் பள்ளமானது. வீரர்கள் மெள்ள மெள்ளத் தடம் பார்த்துத்தான் போக வேண்டும். இது புரியாத கிள்ளையர்கள், ஆறாயிரம் மைல் களுக்கு அப்பாலிருந்து வந்தார்கள் பொறுத்தோம். கிள்ளை யர்கள் இதுவரை எவருக்கும் இடைஞ்சலில்லாமல் ஒழுங் காக வாழ்கிறார்கள். அதையும் சகித்தோம்! ஆனால், கடைசியில் பண்ணிய காரியம்தான் நமக்குப் பிடிக்க வில்லை. தங்களைச் சேர்ந்த யாரோ ஒரு பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் கல்யாணமாம். அதற்காக நமது நெற் களஞ்சியத்தைக் கொள்ளையிட்டு குறைந்த விலைக்கு விற்றுக் கோதுமை ரொட்டி சுட்டுத் தின்றுவிட்டார்கள்! இந்தா நீயும் தின்னு என்று நமக்கு ஒரு துண்டு போட்டார் களா? நீங்களே சொல்லுங்கள்! இதுதகுமா? தருமம்தானா? ஆகவே புறப்படுங்கள் போருக்கு பயப்படுங்கள் எதற்கு? தோல்விக்கு! மறக்காமல் வாளை எடுத்துக் கொள்ளுங்கள். இத்துடன் என் பேஷ்ஷை முடித்துக் கொள்கிறேன்.

கிட்ட: அதே சரே, அட்லே சேசானு. வீரர்களே வீரிகளே! தம்பியுடையான் படைக்கஞ்சான் என்பதுசரியாகி விட்டது. என் தம்பி கக்கிய கருத்துக்கள் என்னை மேலும் வீரனாக்கிவிட்டன. சில நாள்களுக்கு முன் என் உடம்பில் ஒரு படை இருந்தது. தம்பிதான் ஏதோ மருந்தைத் தடவிக் குணப்படுத்திவிட்டான். தம்பியுடையான் படைக்கஞ்சான் என்ற தமிழ்ப் பழமொழி பொய்த்துப் போகவில்லை. அன்று அந்தப் படை! இன்று எதிராளிகளின் படை! இதையும் விரட்டியடிக்க வீர உரையாற்றிவிட்டான் தம்பி. அடுத்து அமைச்சர் காலாவதியா பிள்ளை கொஞ்சநாழிகை அறை கூவுவார். நல்ல பல கருத்துக்களையும் அதுபோழ்து அவர் கக்குவார்.

காலா: அரசே! இளவரசே! தலைவலியே! மன்னிக்கவும் தளபதியே! குடிமக்களே! உங்களுக்கு என் அன்பு வணக்கங்கள். காலாவதி என்னும் வார்த்தையை அடிக்கடி உபயோகிக்கிறேன் என்று எனக்குக் காலாவதியாபிள்ளை எனச் செல்லப்பெயர் சூட்டியுள்ளீர்கள் நீங்கள்! அதே நான் இப்பொழுதும் அதே காலாவதி என்ற வார்த்தையை உபயோகப்படுத்த இருக்கிறேன். நமது கோரிக்கைகள் காலாவதியாகிவிட்டன! கிள்ளையர்களை முளையிலேயே கிள்ளியிருக்கவேண்டும். தவறிவிட்டோம்! இன்று அவர்கள் நம்மைக் கிள்ளுகிறார்கள். அதன் பயனாகத்தான் நெல் களஞ்சியம் இன்று காலியாகிவிட்டது! சரி நடந்தது போகட்டும். புறப்படுங்கள் போருக்கு. ஒன்று சொல்லுகிறேன், நன்று கவனியுங்கள். உயிர் போனால் சாவோம், உயிர் இருந்தால் வாழ்வோம்! 'வாழ்க திருமுள்வேலிச் சீமை, வளர்க காஞ்சபதியின் புகழ்' என்று வாயார வாழி பாடுவோம்.

(கைதட்டல். காலாவதியா பிள்ளை அமருகிறார்.)

கிட்ட: (எழுந்து) அதே சரே, அட்லே சேசானு, என்னருமை மாக்களே! பசுவைச் சாதுவான பிராணி என்று கரடி விடுவதைப் போல் என்னைக் கோழை என்று சிலர் கிண்டல் செய்கிறார்கள்! நீங்களே சொல்லுங்கள். நானா கோழை? கிண்டலுக்குப் பயப்படாத நான் எப்படிக் கோழையாய் இருக்கமுடியும்!

(ஒரு திசையைக் கூர்ந்து கவனித்துவிட்டுப் பயந்த வாறே சீமைத்துரையிடம் இரகசியமாக)

தம்பி, தம்பி! அதோ அந்தப் பக்கம் பாரு! நம்ப நாட்டு எல்லை வருகிறவரைக்கும் நாயை முயல் துரத்திக்கிட்டு வந்தது. நம்ப எல்லைக்குள்ளே வந்ததும் முயல் காப்பாரவாகிக் கலங்கி ஓடி வருது! என் பக்கமே வந்துவிடும் போலிருக்கு! போய் விரட்டிவிட்டுப்பிட்டு வந்திரு தம்பி! எனக்குப் பயம் ஒன்னும் இல்லை, என்னவோ போலிருக்கு, அவ்வளவுதான்.

(அண்ணனின் சொல்லைக் கேட்டுச் சீமைத் துரை முயலை விரட்டப் போகிறான். கிட்ட பொம்மன் விட்ட இடத்திலிருந்து தன் அறை கூவலைத் துவக்குகிறான்.)

கிட்ட: (உரத்த குரலில்) நீங்களே சொல்லுங்கள். நான் ஒரு கோழையா?

வீரர்கள்: இல்லை! இல்லை! இல்லை!

கிட்ட: அதே சரே, அட்லே சேசானு: வீரர்கள் வாக்கு வேதவாக்கு! என்னை வீரன் என்று வீரர்களாகிய நீங்கள் ஒப்புக்கொண்டு விட்டீர்கள். இப்போதுதான் என் ஆத்மா சாந்தி அடைகிறது. சரி, இனியும் பேசிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. புறப்படுங்கள்போருக்கு! எதற்கும் கைவசம் நாலைந்து வாள்கள் வைத்துக்கொள்ளுங்கள். ஏனென் றால், நமக்கெல்லாம் சிக்கம்மா, உயிர் ஒன்றே ஒன்றுதான் கொடுத்திருக்கிறாள். நெல்லைக் களவு செய்த கிள்ளையர் களை, புல்லை மாடு தின்பதுபோல தின்று, கொன்று மென்று, வென்று வருவோம்! வலது காலை எடுத்து வைத்துப் புறப்படுங்கள். எது வலது கால் என்று தெரியா விட்டால் என்னிடம் கேளுங்கள். நான் சொல்லுகிறேன். எது இடது காலோ, அதற்கு அடுத்ததுதான் வலது கால்! 'காள் காள்' என்று கர்ஜனை செய்தவாறே புறப்படுங்கள். எதிரிகளின் பீரங்கிமுன்னே நெஞ்சைக்காட்டுங்கள். முடியா விட்டால் முதுகைக் காட்டுங்கள். புறமுதுகை மறுக்கும் புறநானூறு தன் பெயரிலேயே புறம் என்ற வார்த்தையைக் கொண்டிருப்பது ஏன்? ஏன்? ஏன்? புறநானூறுக்கு நெஞ்சைக் காட்டிவிட்டுப் போர்க்களத்தில் முதுகைக் காட்டுங்கள். முதுகில் குண்டுபட்டாலும் அந்தக் குண்டு அப்படியே துளைத்துக் கொண்டு மார்புப் பக்கம்தானே வருகிறது. எப்படியோ மார்புக்கும் முதுகுக்கும் இடையில் குண்டை நடமாடவிட்டால் அதுவே குன்றாத வீரம்தானே! அப்பத்தைஎப்பக்கம் கடித்தால்என்ன?ஊம்...புறப்படுங்கள். மூன்றாம் நாள் காலையில் சூரியன் எட்டிப் பார்ப்பதற்கு

முன்னாலேயே நாம் கீளையங்கோட்டையை எட்டிப் பார்த்துவிட வேண்டும். இதில் அபிப்பிராயபேதம் உள்ளவர்கள் மட்டும் கையைத் தூக்குங்கள் பார்க்கலாம்!

(மேடையிலிருக்கும் தளபதிசள்ளையத்தேவன் கையைத் தூக்குகிறான்.)

கிட்ட: என்ன விந்தை! மேடையிலிருக்கும் நீயே எதிரிகளின் பக்கம் கையைத் தூக்குகிறாயா? இன்னும் கொஞ்சநேரத்தில் நானே என்னை எதிர்த்து நான் என் கையைத் தூக்கி விடுவேனா? சள்ளையத்தேவா, இதற்கு உனது விளக்கவுரை தான் என்ன? என்ன? என்ன?

(முயலை விரட்டிவிட்டுச் சீமைத்துரை வருகிறான்)

சள்ளையத்தேவன்: மன்னர் மன்னா, உமது திருமுடிக்கு ஓர் ஆடிதள்ளி நின்றே வணக்கம் செலுத்துகிறேன். கிள்ளையர்களைத் தாக்குவதில் நாம் இப்படித் தாமதிப்பது சரியில்லை என்றே எனக்குப்படுகிறது. கிள்ளையர்கள் படை இப்பொழுதே நம் பிராந்தியங்களில் உலவி வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

(அப்பொழுது வெகு தூரத்திலிருந்து படை நடந்து வரும் ஓசை கேட்கிறது.)

சீமை: ஆ!

சள்ளை: நன்றாகக் கவனியுங்கள் அரசே! எங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்! ஆ! அதோ மலையடிவாரத்தைப் பாருங்கள், சாரி சாரியாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

கிட்ட: (பயந்து) ஐயையோ! வந்து விட்டார்கள் போலிருக்கிறதே!

சள்ளை: இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?

காலா: இனியும் பொறுப்பதற்கில்லை அரசே!

சீமை: எல்லை மீறிவிட்டார்கள்!

கிட்ட: (பதறி) ஏன் இப்படிச் சண்டை என்றால் சத்திரத்துச் சர்க்கரைப் பொங்கலுக்கு ஆசைப்படுவதுபோல் ஆசைப்படுகிறீர்கள்! மர்க்களிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டாமா?

காலா: நம் நாட்டில் மாக்கள் மாக்களாக இல்லை, நம் துரதிர்ஷ்டம் அவர்கள் மக்களாக இருக்கிறார்கள்!

கிட்ட: மந்திரி (கலங்கிய தொனியில்) என் பக்கத்தில் வந்திரி!

(காலாவதி மன்னன் அருகில் வந்து அமருகிறார்)

கிட்ட: வீரர்களிடம் ஒரு வார்த்தை கேட்டுகொண்டால் நல்லது அல்லவா?

சீமை: சீக்கிரம் கேளுங்கள் அண்ணா! என் மீசை ஊறுகிறது அண்ணா ஊறுகிறது!

கிட்ட: எனக்கு எல்லாமே ஊறுகிறதடா தம்பி, அவசரப்படாதே!

காலா: அரசே, கொஞ்சநேரத்துக்கு முன் போர் என்று துடித்தீர்களே! இப்போது ஏன் கலங்குகிறீர்கள்?

கிட்ட; கலக்கமல்ல இது, குழப்பம் இது! குழப்பம்! குழப்பம்! ஏன் குழப்பம்? கேட்டுச் சொல்லிவிடுகிறேன், என் வீரர்களே! உங்களுக்குப் போரு வேணுமா வேண்டாமா?

வீரர்கள்: வேண்டும்! வேண்டும்!

கிட்ட: துணைக்கு வீரிகள் வேண்டுமா?

வீரர்கள்: வேண்டாம் அரசே! உங்களைப் பார்த்த வுடனேயே ஆயிரம் யானைகளின் பலன் வந்துவிட்டது எங்களுக்கு!

கிட்ட: நன்றாகச் சொன்னீர்கள்! உங்களுக்கெல்லாம் என் நன்றியை வீசுகிறேன். வீரிகளே! நீங்களெல்லாம்

முன்னாலேயே நாம் கிளையங்கோட்டையை எட்டிப் பார்த்துவிட வேண்டும். இதில் அபிப்பிராயபேதம் உள்ளவர்கள் மட்டும் கையைத் தூக்குங்கள் பார்க்கலாம்!

(மேடையிலிருக்கும் தளபதிசள்ளையத்தேவன் கையைத் தூக்குகிறான்.)

கிட்ட: என்ன விந்தை! மேடையிலிருக்கும் நீயே எதிரிகளின் பக்கம் கையைத் தூக்குகிறாயா? இன்னும் கொஞ்சநேரத்தில் நானே என்னை எதிர்த்து நான் என் கையைத் தூக்கி விடுவேனா? சள்ளையத்தேவா, இதற்கு உனது விளக்கவுரை தான் என்ன? என்ன? என்ன?

(முயலை விரட்டிவிட்டுச் சீமைத்துரை வருகிறான்)

சள்ளையத்தேவன்: மன்னர் மன்னா, உமது திருமுடிக்கு ஓர்ஆடிதள்ளி நின்றே வணக்கம் செலுத்துகிறேன். கிள்ளையர்களைத் தாக்குவதில் நாம் இப்படித் தாமதிப்பது சரியில்லை என்றே எனக்குப்படுகிறது. கிள்ளையர்கள் படை இப்பொழுதே நம் பிராந்தியங்களில் உலவி வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

(அப்பொழுது வெகு தூரத்திலிருந்து படை நடந்து வரும் ஓசை கேட்கிறது.)

சீமை: ஆ!

சள்ளை: நன்றாகக் கவனியுங்கள் அரசே! எங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்! ஆ! அதோ மலையடிவாரத்தைப் பாருங்கள், சாரி சாரியாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

கிட்ட: (பயந்து) ஐயையோ! வந்து விட்டார்கள் போலிருக்கிறதே!

சள்ளை: இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?

காலா: இனியும் பொறுப்பதற்கில்லை அரசே!

சீமை: எல்லை மீறிவிட்டார்கள்!

கிட்ட: (பதறி) ஏன் இப்படிச் சண்டை என்றால் சத்திரத்துச் சர்க்கரைப் பொங்கலுக்கு ஆசைப்படுவதுபோல் ஆசைப்படுகிறீர்கள்! மர்க்களிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டாமா?

காலா: நம் நாட்டில் மாக்கள் மாக்களாக இல்லை, நம் துரதிர்ஷ்டம் அவர்கள் மக்களாக இருக்கிறார்கள்!

கிட்ட: மந்திரி (கலங்கிய தொனியில்) என் பக்கத்தில் வந்திரி!

(காலாவதி மன்னன் அருகில் வந்து அமருகிறார்)

கிட்ட: வீரர்களிடம் ஒரு வார்த்தை கேட்டுகொண்டால் நல்லது அல்லவா?

சீமை: சீக்கிரம் கேளுங்கள் அண்ணா! என் மீசை ஊறுகிறது அண்ணா ஊறுகிறது!

கிட்ட: எனக்கு எல்லாமே ஊறுகிறதடா தம்பி, அவசரப்படாதே!

காலா: அரசே, கொஞ்சநேரத்துக்கு முன் போர் என்று துடித்தீர்களே! இப்போது ஏன் கலங்குகிறீர்கள்?

கிட்ட; கலக்கமல்ல இது, குழப்பம் இது! குழப்பம்! குழப்பம்! ஏன் குழப்பம்? கேட்டுச் சொல்லிவிடுகிறேன், என் வீரர்களே! உங்களுக்குப் போரு வேணுமா வேண்டாமா?

வீரர்கள்: வேண்டும்! வேண்டும்!

கிட்ட: துணைக்கு வீரிகள் வேண்டுமா?

வீரர்கள்: வேண்டாம் அரசே! உங்களைப் பார்த்தவுடனேயே ஆயிரம் யானைகளின் பலன் வந்துவிட்டது எங்களுக்கு!

கிட்ட: நன்றாகச் சொன்னீர்கள்! உங்களுக்கெல்லாம் என் நன்றியை வீசுகிறேன். வீரிகளே! நீங்களெல்லாம்

வீட்டுக்குப் போய் வாருங்கள்! அமைச்சரே! தம்பியே! தளபதியே! நீங்கள் இந்தப்படையை நடத்திச்செல்லுங்கள். (தம்பியிடம் இரகசியமாக) தம்பி, என்பொடிடப்பியில் தூள் காலியாகிவிட்டது. அது இல்லாவிட்டால் போர் அவ்வளவு ருசிக்காது. நான் அந்தப்புரம்போய் டப்பியில் பொடி அடைத்துக் கைவசம் ஒரு வாளையும் எடுத்துக்கொண்டு குதிரை சகிதம் வந்து சேருகிறேன்.

சீமை: சரி அண்ணா, போய்வாருங்கள்!

(மேடையின் ஒருபக்கமாக மன்னன் இறங்குகிறான்)

சீமை: (உரத்த குரலில்) கிட்டபொம்மன்!

வீரர்கள்: வாழ்க!

சீமை: கிள்ளையர்கள்

வீரர்கள்: வீழ்க!

சீமை: கிட்டபொம்மன்

வீரர்கள்: வீழ்க!

சீமை: கிள்ளையர்கள்!

வீரர்கள்: வாழ்க!

காலா: ஆகா! கிட்டபொம்மன் வீழ்க என்று வீரர்கள் மன்னனைக் காலாவதி பண்ணுகிறார்களே!

சீமை: அமைச்சரே! இப்படிப் புத்திசாலித்தனமாகப் பேசாதீர் என்று எத்தனை தரம் சொல்லுவது? பாதையில் படுத்திருக்கும் சிங்கம் கிங்கம், புலி கிலி ஓடுவதற்காக வாயில் வந்தபடி அவர்கள் சத்தம் போடுகிறார்கள்! அவ்வளவுதான்!

காலா: அப்போ சரி. (உரத்தகுரலில்) சீமைத்துரை!

வீரர்கள்: வீழ்க!

சீமை: (கோபங்கொண்டு) காலாவதி!
வீரர்கள்: வீழ்க!

(ஓர் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த கிட்ட பொம்மன் இப்போது வந்து)

கிட்ட: இப்போதுதான் என் ஆத்மா சாந்தி அடைகிறது. சீக்கிரம் புறப்படுங்கள். நான் அரண்மனை போய் விட்டு அதிவிரைவில் ஆவேசமாக அங்கு வந்து சேருகிறேன்.

(கிட்டபொம்மன் போகிறான். வீரர்கள் முதுகையும் தலையையும் சொரிந்துகொண்டு, மடத்திற்குச் சாமியார்கள் போவதுபோல் போகிறார்கள். போர் முழக்கம் 'சாந்திவேல் சக்திவேல்' என்று கூவியவாறே சீமைத்துரை, காலாவதியாபிள்ளை, சள்ளையத்தேவன் மூவரும் வாளை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு போகிறார்கள்)

*(திரை)*

## காட்சி; 3

இடம்: அரண்மனை.

கதாபாத்திரங்கள்: கிட்டபொம்மன், கீரசக்கம்மாள், சேவகன்.

(கிட்டபொம்மன் பொடி டப்பியில் மூக்குப் பொடியை நிரப்பி ஒரு சிமிட்டா எடுத்து போட்டுக் கொண்டு வீரமாகச் சுற்றி ஒரு பார்வை பார்த்த வாறே சுவரில் மாட்டப்பட்டிருக்கும் வாளை எடுக்கப் போகிறான். திடீரென்று பயந்து விலகி வந்து)

கிட்டபொம்மன்: ஐயோ! நல்லவேளை! பிழைத்தேன்! நான் மரணத்திற்கும் அஞ்சாமல் போர்க்களத்திற்குப் புறப் படும்போது தடையாகிவிட்டதே.

கீரசக்கம்மாள்: (ராணி வருகிறாள்) நர்தா! எங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? தேசமாளும் நீங்கள் திருடன் மாதிரி இப்படி முழிப்பதேன்?

(பொடிபோட்ட வேகத்தில் கிட்டபொம்மன் பயங்கரமாகத் தும்முகிறான். ராணி பயந்து விலகிக் கொண்டு)

கீர: அத்தான்.

கிட்ட: அத்தான். செத்தான்!போயி அதோ அந்த வாள் கைப்பிடியைப் பாரு! நான் போருக்குப் புறப்படும்போது இப்படி தடையாயிட்டுதே.

கீர: என்ன அது?

கிட்ட: நீ போய்ப் பாரேன். எனக்குத் திரும்பவும் பார்க்கப் பயமாயிருக்கு. ஹே ராமா. சுக படு கதி சுன்னா! போய்ப்பாரு. கீரி ஒரு தரம் செப்பினால் தெலுசுனாவா?

கீர: கொஞ்சம்தான் நல்லா மாட்டிலாடுங்களேன்.

கிட்ட: நான் மாட்டிக்கிட்டு முழிக்கிறேன். நீ மாட்ட லாடச் சொல்றியே. போயிப்பாரு கீரி.

(போய் வாளைப் பார்க்கிறாள். பார்த்தபின் வியந்து)

கீர: தேளு! இதுக்குத்தானா!

(அதை எடுத்துக் கீழே தட்டி வாளின் நுனியா லேயே நசுக்கிக் கொல்லுகிறாள். கிட்டபொம்மன் இடைமறித்து)